# யாதுமாகி...

ஆளுமையின் ஓர் அங்கம்

*முதுகலை & தமிழாய்வுத்துறையின் மாதாந்திர மின்னிதழ்*

**மலர் – 01** **இதழ் – 07** **பிப்ரவரி – 2024**

திருவள்ளுவர் ஆண்டு
2055 (தை – மாசி)




**முதுகலைத் தமிழாய்வுத்துறை**

**ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி)**

**தேசியத் தர மதிப்பீட்டு நான்காம் சுற்றில் 'A++' அங்கீகாரம் பெற்றது** (CGPA 4-க்கு 3.69)

**(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)**

**திருச்சிராப்பள்ளி – 620020**

**தமிழ்நாடு, இந்தியா**

| | | |
|---|---|---|
| இதழ் | : | **யாதுமாகி** |
| முதன்மையாசிரியர் | : | முனைவர் அ.சையத் ஜாகீர் ஹசன்,<br>தேர்வு நெறியாளர்,<br>இணைப்பேராசிரியர் & தமிழாய்வுத்துறைத் தலைவர். |
| இணை ஆசிரியர் | : | முனைவர் வ.முஹம்மது யூனுஸ், இணைப்பேராசிரியர் |
| துணை ஆசிரியர் | : | திரு. க.இம்தாதுல்லாஹ், இணைப்பேராசிரியர் |
| பொறுப்பாசிரியர் | : | **திரு. வீ.விஜய்**<br>உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை. |
| பிரதி | : | மின்னிதழ் |
| வெளியீடு | : | **பிப்ரவரி – 2024** |


---


**இதழாசிரியர் குழு**

*முனைவர் த.செல்வராசு*
*முனைவர் ஷே.நாகூர்கனி*
*திரு. கா.முகமது இஸ்மாயில்*
*முனைவர் மு.சாதிக்பாட்சா*
*முனைவர் அ.தௌஃபீக் ரமீஸ்*
*முனைவர் க.சிராஜுதீன்*
*முனைவர் ச.அ.சையத் அகமது பிரோசு*
*முனைவர் க.இக்பால்*
*முனைவர் மு.ஹ.ஜஹானாரா*

**மாணவ ஒருங்கிணைப்பாளர்கள்**

*ப.அ.முஹம்மது ஆதில் முர்ஷித்*
*ஷா.முஹம்மது அஸ்ரின்*
*ஜோ.ஜார்ஜ் இம்மானுவேல்*
*பி.வீ.தயாநிதி*
*ஷா.முகமது அர்ஷத்*
*உ.பாபர் முகமது இஸ்மாயில் காஜா*
*ஜா. முகமது இலியாஸ்*
*மு.யாசர் அராபத்*
*மு.முகமது இமாதுதீன்*
*ரா.பிரீத்தி*
*ம.தாரணி*
*செ.ராகவி*
*சே.ஜெரினாபேகம்*


---

காலங்கள்…
காத்திருக்கத் தெரியாதவை,
நேரங்கள்…
நின்றுவிடத் தெரியாதவை,
கண்ணிமையைக்
காவலாக்கி
கனவுகள்
கட்டியிருக்க,
முடிச்சுகளோ
முகாந்திரம் தேடுகின்றன.
முட்டி மோதியும்
பார்க்கின்றன…
முகவரி தேடுவதற்குள்
மூச்சிறைத்துப் போக
கனவுகள்
கானல்நீராகுமா?
காட்சிகளாகுமா?
கனவுகள் காட்சிகளாய்
களமாடிட
"யாதுமாகி"
நிற்கிறது தமிழ்…

– **வீ.விஜய்**
(பொறுப்பாசிரியர்)

# மலக்குழி மரணங்கள்...

தன் குடும்பத்து உறுப்பினர்களின்
குழி விழுந்த வயிற்றை
நிறைக்க,
நாட்டு உறுப்பினர்களின்
மலம் நிறைந்த
குழியில் இறங்கி
உயிரை விடுகிறான்
ஒரு தகப்பன்!!!




அந்த மலக்குழியில்
இறங்கி அள்ளியாதோ
குப்பைக்கூலம்,
அதன் மூலம்
அவன் குடும்பத்திற்கே
வாழ்வாதாரம்!



தன்மானத்தில் பேசும்
கூட்டமோ,
விஞ்ஞானத்தில் தோற்றது!
சமுகநீதி பேசும்
கூட்டமே,

நிதி செலவழித்தால்
இந்த அவல நிலையில்
ஏற்படும் பெரும் மாற்றமே!

எங்கும் இயந்திரஜாலம்,
மலகுழியில் மட்டும்
அவலக்கோலம்!

ஏன் கண்டுபிடிக்கவில்லை
இயந்திரம்?
கிடைத்தால்,




உன் சாதி ஆதிக்கத்திலிருந்து
விழிப்புணர்வடைந்து
விடுவார்களோ
என்ற அச்சமோ!

சுகாதாரம் காக்க
வந்த தகப்பனுக்கு,
இறுதியில் கிடைத்தது
இழப்பீட்டு நிவாரணமே!!!



வே.விக்னேஷ்வரன்,
முதுகலை முதலாமாண்டு.

## சினேகி...



உன் மனச்சிறையில்
நானே கைதி!
தொடருமோ உன்
மௌன அமைதி!
நீயே என்
காதல் கையகராதி!
நம் உணர்வே
உறவின் ஆதி!
நம் உறவே உயிரின் இறுதி!
நம் குருதியிலும்
உண்டு மனஉறுதி!
நம் கடிதங்கள்
அச்சிடப்படும் பலபிரதி!
நீயே என் சினேகி எனக் கருதி
எழுதினேன் மனமுருகி!



வி.ஹரிஷ்ராஜ்,
முதுகலை முதலாமாண்டு.

## பாரதீ....



பாரதமே போற்றிட
பாப்பா பாட்டினை பாடினாய்
தலைநிமிர்ந்து நடக்க
திறவுகோல் கொடுத்தாய்
இல்லை என்ற சொல்!!!!!
இல்லை உன் வரிகளில்....
எதற்கும் துணிந்திட்டேன்
உன் வரிகளில்...
இலவம்பஞ்சாக இருந்த என்னை
இரும்புத்தூணாக மாற்றினாய்...
இவ்வுலகத்தை உன் வரிகளால்
இயற்றினாய்...
உயர உயர பறக்கும் உலகத்தை
உருகி உருகி வர்ணித்தார்
பெரிது பெரிது என்ற உலகம்
சிறிது சிறிது என்றாகின...
உன் வரிகளில்......



மு.இலக்கியா,
இளங்கலை இரண்டாமாண்டு.

## பெண்...



பெண்ணாக பிறந்த நான்!
பெண்பிள்ளையா என்று சிலர்
பெண்பிள்ளை தானே என்று சிலர்....
நிற்க, நடக்க கற்று கொடுத்தாலும்
பேசவும் பழகவும் கட்டுபாடுகள்.....
புத்தகம் படித்த காலங்களில்
பிள்ளையை பிடித்த நேரங்கள்.....
வாழ்வை அறிந்த வேளையில்
வயதாகி விட்டதம்மா!...



மு.இர்பானது ஸஹ்தியா,
இளங்கலை இரண்டாமாண்டு.

## கனவுகள் + கற்பனைகள்



எண்ணியதெல்லாம் நடப்பதற்கும்
எண்ணிய வாழ்க்கை கிடைப்பதற்கும்
உலகில் பல கனவுகள்
உள்ளத்தில் சில நினைவுகள்...
இனம்பிரியா இப்பிரபஞ்சத்தில்
இணையில்லாச் சொர்க்கத்தில்
இல்லாதவை பற்றிய ஏக்கத்தில்!
இல்லை என்ற புரிதலில்
இருப்பவை பற்றிய மறதியில்!
இருந்தும் அறியா விடைத்தேட
இவற்றை விட்டு வெளியேறினால்
வாழ்க்கை வெறும் கற்பனையே....!



ம.தாரணி,
இளங்கலை இரண்டாமாண்டு.




1952-ஆம் ஆண்டு பெப்ரவரி 21ஆம் திகதி மொழியை தேசிய மொழியாக அறிவிக்கக் கோரி, போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களில் நான்கு பேர், அப்போதைய பாகிஸ்தான் அரசின் அதிரடி நடவடிக்கையால் ஆர்ப்பாட்டத்தின்போது கொல்லப்பட்டனர். பல மாணவர்கள் காயமடைந்தனர்.

இந்த சம்பவம் ஏற்படுத்திய தாக்கத்தால் பெப்ரவரி 21-ஆம் திகதியை சர்வதேச தாய்மொழி தினமாக அனுஷ்டிக்குமாறு 1999ஆம் ஆண்டு யுனெஸ்கோ அறிவித்தது.

உலகில் வாழும் அனைத்து உயிரினங்களும் ஒன்றையொன்று தொடர்புகொள்ள ஊடகமாக இருப்பது மொழியாகும்.

விலங்குகள், பறவைகள், புழு, பூச்சிகளுக்கும் கூட, உணர்வுகளை பரிமாறிக்கொள்ள ஒவ்வோர் இனத்துக்கும் தனித்தனி மொழிகள் உள்ளன. எனினும், அவற்றின் பாஷைகள் மனிதர்களுக்குப் பெரும்பாலும் புரிவதில்லை.

மனிதர்களுக்குள்ளும் ஒருவரையொருவர் தொடர்புகொள்ள பேசும் மொழிகளில் எத்தனையோ வேறுபாடுகள் காணப்படுகின்றன.

உலகில் பேசப்படும் 6 ஆயிரம் மொழிகளில் 1,500 மொழிகள் ஆயிரம் பேருக்கு கீழானோர் பேசுபவை. 3 ஆயிரம் மொழிகள் 10 ஆயிரம் பேருக்கும் குறைவானோர் பேசுபவை. எனினும், இவற்றில் எல்லா மொழிகளும் எல்லோருக்கும் புரிவதில்லை. எனினும், நாம் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்.

உலகில் 94 நாடுகளில் கிட்டத்தட்ட 8 கோடி பேர் தமிழ் மொழியைப் பேசுபவர்களாக உள்ளனர்.

எனினும், தமிழ் பேசுபவர்கள் வசிக்கும் நாடுகள் அனைத்திலும் தமிழ் அரச மொழியாக அங்கீகாரம் பெறவில்லை. தமிழர்கள் அதிகமாக வாழும் இந்தியாவிலும் தமிழ் அரச மொழியாக்கப்படவில்லை.

ஆனால், இலங்கை தமிழை அரச மொழியாக அங்கீகரிக்கும் நாடு என்ற வகையில் தனிச்சிறப்பு பெறுகிறது.

இலங்கையில் மட்டுமின்றி சிங்கப்பூரிலும் தமிழ் மொழியானது அரச மொழிகளில் ஒன்றாக விளங்குகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

நாம் நமது தாய்மொழியான தமிழின் தனித்துவத்தை, மகத்துவத்தை உணர வேண்டும். தமிழில் பேசுவதைப் பெருமையாகக் கருத வேண்டும்.

தமிழ் பேசுபவர்கள் எத்தனை பிற மொழிகளைப் பேசத் தெரிந்திருப்பினும், தமிழ் மொழியின் உன்னதத்தை மறந்து, மொழிச் சிதைவு செய்பவர்களாக இருந்தால், அது, தாயை உதாசீனப்படுத்துவதைப் போன்றது என தமிழ்ப் பற்றாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இன்று பல நாடுகளில் தமிழர்கள் வாழ்ந்து வருவதோடு, பல சாதனைகளை நிலைநாட்டி, தமிழுக்குப் பெருமை சேர்த்து வருகின்றனர்.

பிற மொழிகளைப் பேசவேண்டிய சூழ்நிலை தற்காலத்தில் ஏற்பட்டுள்ளபோதும், தமிழ் மொழியைப் பாதுகாத்து, தமிழ்க் கல்வி முறைக்கும் இடமளித்து, வருங்கால சந்ததிக்கும் தமிழுணர்வை கடத்துவோம்!

**யாதுமாகியின்**

**வாசக அன்பர்களுக்கு**

**உலக தாய்மொழி நாள்**

**நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்**




## சவப்பெட்டி...



வைகாசி ஆறாம் நாள். காலையில சீக்கிரமா எழுந்திருச்சு குளிச்சிட்டு, அய்யனார் கோவிலுக்கு நடந்தன வெடிப்புடன் இருந்த கால்கள். கோவிலை அடைந்ததும் ஆனந்தப் பெருமூச்சு. பூசாரியிடம் மகன் அன்பு, மருமகள் விமலா, கணவர் ராமமூர்த்தி, இறுதியாகத் தன் பெயரையும் சொல்லி அர்ச்சனை செய்து விட்டு, சிறிது நேரம் அமர்ந்திருந்தாள் ஜானகி.

திரும்பி வரும் வழியில் கையில் வைத்திருந்த மிட்டாய்களைக் கண்ணில் படும் குழந்தைகளுக்கெல்லாம் கொடுத்துக் கொண்டே வந்தாள். தன் மகனின் பிறந்த நாளான இன்று விமரிசையாக அவனுக்கு விருந்து அளிக்க வேண்டும் என நினைத்துக் கொண்டே அவள் கால்கள் வேகம் எடுத்தன. மிதிவண்டி சக்கரம் மண்ணை உராய வீட்டு வாசலை வந்தடைந்தான் அன்பு.

விமலா....விமலா...

இதோ வரேங்க...

இவ்வளவு நேரமா வெளியே வர்றதுக்கு கடிந்து கொண்டான் அன்பு.

இல்லங்க உள்ள வேலையா இருந்தேன்...கையில என்னங்க அது?

வயலுக்குத் தண்ணிப் பாய்ச்சிட்டு வர வழியில ஆத்துல மீன் புடிச்சேன் அதக் கொடுக்கலாம்னு கூப்பிட்டேன். இந்தா,

இந்த மீனை நல்லா சுத்தம் செஞ்சு குழம்பு வய்யி. இன்னைக்கு ஒரு புடி புடிக்கணும்...

உள்ள வாங்க உங்களுக்காக தடபுடலான விருந்தே காத்துக்கிட்டு இருக்கு.

விருந்தா? என்று கேட்டபடி வீட்டிற்குள் நுழைந்தான் அன்பு.

வாழை இலையில் முட்டை, மீன், நண்டு, நாட்டுக்கோழிக் குழம்பு என அடுக்கி வைத்திருந்தாள் ஜானகி. இதையெல்லாம் பார்த்துத் திகைத்துப் போய் நின்றான் .

எனக்குக் கூட உங்க அம்மா வாழ்நாள்ல இப்படி செஞ்சு போட்டது இல்லடா..... என்னமோ இந்த உலகத்துல பொறக்காத குழந்தை புதுசா பொறந்த மாதிரி வானத்துக்கும் பூமிக்கும் கிடந்து குதிக்கிறா.

சும்மா இருங்க.... வாப்பா, வந்து உட்காரு. அம்மா உனக்காக என்னெல்லாம் செஞ்சு வச்சிருக்கேன்.

நல்லா சாப்பிடுயா.....

சாப்பிட அமர்ந்தான் அன்பு. இலையில் இருந்த ஒவ்வொன்றையும் சாப்பிட்டு விட்டு குறை சொன்னான்.

ஜானகிக்கோ முகத்தில் அறைந்ததுப் போன்ற உணர்வு.

இதைப் பார்த்த ராமமூர்த்திக்கு கோபத்தில் முகம் சிவந்தது. ஆனால் ஜானகி கண் அசைவுகளாலும், தலை அசைத்தும் சாடை காட்டினாள். பின் கோபமாக எழுந்து ராமமூர்த்தி எழுந்து வேகமாகத் திண்ணையில் போய் அமர்ந்தார்.

இலையை விசிறியடித்து, இதெல்லாம் ஒரு சாப்பாடா..? எனக் கடிந்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியே சென்றான் அன்பு.

உங்க புள்ள இப்படித்தான்னு உங்களுக்கு தெரியும். அவருக்கு அவர் பண்றதுதான் நியாயம். இவ்வளவு நாள் எல்லாத்தப்பையும் பண்ணிட்டு நம்ப

யாருகிட்டயும் பேசாம இருந்தாரு அவரு..... இன்னைக்கு அவருக்காக நீங்களே இறங்கி வந்து அவருக்கு புடிச்சதெல்லாம் செஞ்சு வச்சிருக்கீங்க. அது அவருக்குப்

புடிக்கலன்னாலும் உங்க மனசு கோணாம சொல்லணும்னு கூட தெரியல. எப்பதான் இவர் திருந்துவாரோ தெரியல, ம்ம்ம்....

வெளியே சென்ற அன்பு, அவனுடைய நண்பன் ராஜாவைப் பார்த்தான்.

டேய் ராஜா... டேய்...டேய்... எனக் கூச்சலிட்டான்.

சத்தம் கேட்டு திரும்பிய ராஜா,"டேய் அன்பு எப்படிடா இருக்க.. பார்த்தே ரொம்ப நாளாச்சு" என்றான்.

"வீட்ல எல்லாரும் நல்லா இருக்காங்களா?" என்றான் ராஜா.

ம்ம்ம்....அவங்களுக்கு என்ன இருக்காங்க...

என்னடா இப்படி சலிச்சிக்கிற....?

அதெல்லாம் ஒன்னும் இல்லடா... ஆமா நீ எங்க இந்த பக்கம் போயிட்டு இருக்க..?

அதுவா? மாப்பிள, இங்க கோவில் திருவிழா அப்ப போடுற கூத்து, நாடகம் அப்படின்னு திருவிழா மாதிரி இருக்காம் நம்ம ஊரு வார சந்தை. அதான் பார்க்கலாம்னு போறேன்.

திருவிழா மாதிரியா...? சரிடா நானும் வரேன், சேர்ந்து போவோம்.

இருவரும் பள்ளிப் பருவ நினைவுகளைப் பற்றி பேசியபடி சந்தைக்கு வந்து சேர்ந்தனர்.

அங்கு மக்கள் மற்றும் குழந்தைகள் அனைவரும் தேவையான பொருட்கள் வாங்கும் கடைகள் மற்றும் விளையாட்டுத் திடல்களில் கூட்டம் கூட்டமாகப் பொருள்கள் வாங்கியும் விளையாடியும் மகிழ்ந்து கொண்டிருந்தனர்.

அன்பும் ராஜாவும் சற்று நடந்து செல்லும்போது ஒரு பெரிய கூடாரத்தின் முகப்பில் உள்ள பதாகையைப் பார்க்கிறார்கள். அதில்,

"மரண உலகம்" என எழுதப்பட்டிருந்தது.

என்ன மாப்ள இது, மரண உலகம்னு போட்டு இருக்கு. கூட்டத்தையும் காணோம்

ஆள் இல்லாமல் ஈ ஆடுது. அப்படி என்னதான் உள்ள இருக்கும்" என்றான் ராஜா.

"அதுக்குள்ள போனா செத்துருவோம்னு பயந்து நம்ம மக்க போகாம இருப்பானுங்கடா..." எனச் சொல்லி சிரித்தான் அன்பு.

வா...நாம உள்ள போய் என்ன இருக்குன்னு பாத்துட்டு வருவோம்.

இருவரும் கூடாரத்திற்குள் நுழைந்தனர்.

அங்கே முதியவர் ஒருவர் இருந்தார்.

பெரியவரே... மரண உலகம்னு எழுதி போட்டு இருக்கீங்க.பேர பார்த்துட்டு ஒரு பையலும் உள்ளார வரல. அப்படி என்னதான் இங்க இருக்கு?

அதுவா தம்பி, நீங்க பொறந்ததுல இருந்து இறக்குற வரைக்கும் என்னவெல்லாம் நடக்கும் அப்படிங்றதுதான்ப்பா இந்தக் கூடாரம் முழுக்கவும் இருக்கு.

"சரிங்க பெரியவரே நீங்க சொல்றதெல்லாம் புரியுது. ஆனா இதுக்கா இவ்ளோ செலவு பண்ணி இவ்ளோ பெரிய கூடாரம் போட்டு இருக்கீங்க. எப்படி பொறக்குறோம் எப்படி இறக்குறோம் அப்படிங்றது தான் எல்லாருக்கும் தெரியுமே...என்றான் அன்பு.

"தம்பி.... பொறப்புல இருந்து இறப்பு வரைக்கும் என்ன நடக்குதுன்னு எல்லாருக்கும் தெரியுங்றது எனக்கும் தெரியும். ஆனா அந்த இடத்துல நாம இருந்தா என்ன நடக்கும் அப்படிங்றது தெரியுமா? அதை உணர வைக்கிறதுதான் இந்த இடம். நீங்க ரெண்டு பேரும் இதுக்குள்ள போய்ட்டு வந்தீங்கன்னா வாழ்க்கைன்னா என்னன்னு புரிஞ்சிப்பீங்க.

ஓ....சரி... சரி....

மாப்ள, பெருசு என்னமோ சொல்லுது வா உள்ள போய் பார்ப்போம்.

ராஜா சற்று தயங்கினான்.

வா மாப்ள. நான் இருக்கேன்ல, பார்த்துக்கலாம் உள்ள போவோம் வா... இருட்டான பாதை வழியே ஒரு அறைக்குள் நுழைந்தனர் மூவரும்.

அந்த அறை தாயின் கருவறை போன்ற அமைப்பை பெற்றிருந்தது.

"இதுதான் தாயின் கருவறை"

என்னடா அன்பு இதெல்லாம், இதுதான் கருவறையா? பார்ரா.... மேல குடல், ரத்தக்குழாய் மாதிரியெல்லாம் தொங்க விட்டிருக்கானுங்க, என நமுட்டுச் சிரிப்புடன் கூறினான் ராஜா.

ராஜா கூறியதை காதில் வாங்காமல் சற்று மௌனமாகவே அறையை உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தான் அன்பு.

கருப்பை போன்று அமைக்கப்பட்டு இருப்பதை இருவருக்கும் காட்டி இதுல உக்காருங்க என்றார் முதியவர்.

இருவரும் அமர்ந்தனர்.

இப்போ அதுக்குள்ள இருக்குறப்ப எப்படி உணர்ர... என்றார் முதியவர்.

குளிர் காலத்துல போர்வையை போத்துனா எப்படி கதகதப்பா இருக்குமோ அப்படி இருக்கு என்றான் அன்பு.

ஆமா... ஆமா... எனக்கும் அப்படித்தான் இருக்கு பெருசு என்றான் ராஜா.

வெளியே வந்தவுடன் முதியவர், நீங்கள் இப்போது புதிதாகப் பிறந்திருக்கிறீர்கள். உங்களைப் பெற்றதில் மிகவும் ஆனந்தம் அடைகிறார்கள் உங்கள் அம்மா, அப்பா.

ஒரு ஏழைக்குக் கொடுக்கும் பரிசு போல உங்களை முதன்முதலாகக் கையில் தூக்கும் தருணத்தை அவர்கள் கையில் கோடான கோடி வைரங்கள் கொடுப்பது போல உணர்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்களை நீங்கள் எப்படி பாதுகாத்து அரவணைக்க வேண்டும். சிறுவயதில் இருந்து நீங்கள் வேலைக்குச் சென்று திருமணம் முடிக்கும் வரை உங்கள் சுமைகளைச் சுமந்த தெய்வங்கள் அவர்கள்....

இவ்வாறாக அவர் கூறிக் கொண்டிருந்தார்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த அன்புக்கோ, மனமெல்லாம் ஏதோ ஒரு

சுமையை அவன் மனதுக்குள் கொட்டுவது போன்ற உணர்வு ஏற்பட்டது.

அன்பின் முகமாற்றத்தைக் கண்ட ராஜா அன்பின் தோள்கள் மீது கையை வைத்துத் தட்டிக் கொடுத்தான்.

அடுத்த அறை சாதாரண படிக்கட்டுகள் போன்று அமைக்கப்பட்டு இருந்தது. பெருசு... இது எதைப் பத்தி சொல்ல வருது என்றான் ராஜா.

முதியவரோ எதையோ ராஜாவிடம் சொல்ல வருவது போல மௌனமாக சிரித்தார்... இந்தாங்க இதை கை, கால்களில் கட்டிக்கோங்க. இந்த கண்ணாடியைப் போட்டுக்கோங்க, இந்தத் தடியப் பிடிச்சுக்கோங்க.

இதெல்லாம் போட்டுக்கிட்டு போகணும் போல என்றான் ராஜா... என்னது இது இவ்வளவு எடையா இருக்கு இதை கை, கால்ல கட்டிக்க சொல்றீங்க என்றான் அன்பு. கண்ணாடியைப் போட்டுக்கொண்ட ராஜா என்ன இது எல்லாம் மங்கலாத் தெரியுது என்றான்.

இந்த மணல் பையை கை, கால்களில் கட்டிக்கொண்டும், கண்ணாடியைப் போட்டுக் கொண்டும், தடியைப் பிடித்துக் கொண்டும் இந்த படியில் ஏறி இறங்க வேண்டும் அவ்வளவுதான் என்றார் முதியவர்.

படி ஏறி இறங்குறதுதானே எப்படி ஏறி இறங்குறோம் பாருங்க என்றார்கள் இருவரும்.

புன்முறுவலுடன், சரி என்றார் முதியவர்.

இருவரும் படிக்கட்டில் ஒரு அடி எடுத்து வைத்தனர். கை, கால்களைத் தூக்குவதற்கு சிரமமாக இருந்தது. அந்த மங்கலான பார்வையில், தடியைக்கூட பிடித்து நடக்க முடியாத நிலை.

ம்ம்ம்... ம்ம்ம்... என்னப்பா இது யாரோ ஏறி இறங்குறதுதானேன்னு கேட்டீங்க இப்ப என்ன ஆச்சு பேச்சே காணோம் என்றார் முதியவர்.

ஏ...பெருசு மணல் பையை கையில கட்டி விட்டுட்ட, மங்கலான பார்வை உள்ளக் கண்ணாடியும் போட்டுக்க சொல்லிட்ட எப்படியா..... ஏறி இறங்க முடியும். அறிவு இல்லையா உனக்கு என்றான் ராஜா.

ஹா... ஹா...ஹா... இந்த மாதிரி எத்தனை பெரியவர்கள் படிக்கட்டுல ஏறி இறங்கும்போது, சீக்கிரமாக ஏறி இறங்குன்னு

கேலி பண்ணி இருப்போம், இப்ப அவங்க வலி புரியுதா?

பெரியவர் சொன்ன அனைத்தும் தன் தாய் தந்தையிடம் சொல்லி நகையாடியது போல் இருப்பதாகத் தன் மனதில் உணர்ந்தான். வெட்கித்தலை குனிந்தான்.

அடுத்த அறை, மருத்துவ அறை என்றார் முதியவர்... மருத்துவ அறை என்றதும் ராஜா உள்ளே வர மறுக்க, அன்பு மட்டும் மருத்துவ அறைக்குள் சென்றான்.

அந்த அறையினுள் மருந்து வாடை மற்றும் வென்டிலேட்டர் சத்தம் அவன் காதுக்குள் நுழைந்து ஏதோ ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்தியது. முதியவரோ.... நோயாளிகளுக்குக் கொடுக்குற உடைகளைக் கொடுத்து அன்புவை அணிய வைத்து படுக்கையில் படுக்க வைத்தார்.

சரி அப்போ, நான் வெளியே இருக்கேன் என்றார் முதியவர்.

பெரியவரே ஏன் வெளியே போறீங்க?

அது எல்லாம் உங்களுக்கே புரியும் என்றார் முதியவர். தனிமையில் படுத்து கிடக்கிறான் அன்பு. வென்டிலேட்டரில் இருந்து வரும் சத்தத்தால் அவன் இதயத்துடிப்பு அதிகரித்தது. பயத்தில் கண்ணை மூடிக்கொண்டான்.

ஐயோ! என் அப்பா, அம்மா, மனைவி இவர்கள் யாருக்குமே விவரம் எதுவும் தெரியாது. மருத்துவர்கள் சொல்வதை எல்லாம் எப்படி புரிந்து கொள்வார்கள்? அவர்கள் கேட்கும் பணத்திற்கு என்ன செய்வார்கள் அவர்கள்? என்றெல்லாம் தனக்குத்தானே கேள்வி எழுப்பிக் கொண்டிருந்தான் அன்பு.

"திடீரென்று ஒலித்தது ஒரு குரல் "நீங்கள் இப்போது இறக்கப் போகிறீர்கள் இன்னும் இரண்டு நிமிடமே உள்ளது என்றது அந்த குரல்.

அதைக் கேட்டவுடன் அன்புக்கு தன் குடும்பத்தாரிடம் கூப்பிட்டுப் பேச வேண்டும் என்பது போல் உணர்வு ஏற்பட்டது.

அன்பு கூப்பிட முயற்சிக்கிறான் முடியவில்லை. அவனின் கண்கள் கண்ணாடி அறைக்கு வெளியே இருக்கும் குடும்பத்தாரை தேடுகிறது. யாரையும் கூப்பிட முடியாத சூழ்நிலையில் தொண்டை பேசு என சொல்லி ஏங்கி வலிக்கிறது அவனுக்கு. அந்த இரண்டு நிமிடத்தில் அவனின் குடும்பத்தாரின் முகங்கள் அவன் கண்முன்னால் வந்து போனது.

முதியவர் உள்ளே வந்தார்,நீங்கள் இறந்து விட்டீர்கள் என்றார். பின்பு மௌனமாக அன்பு மருத்துவ அறையை விட்டு வெளியே வந்தான். அடுத்ததாக இறுதி அறை என்றார் முதியவர்...

அதற்கும் தனி ஆளாக சென்றான் அன்பு.

சவப்பெட்டி ஒன்று இருந்தது. அதில் படுக்கச் சொன்னார் முதியவர்.

அன்பு அந்த சவப்பெட்டியில் படுத்துக்கொண்டான், சவப்பெட்டியை மூடினார் முதியவர். உள்ளே ஒரே இருட்டாக இருந்தது கை கால்களைக் கூட அசைக்க முடியாத நிலையை உணர்ந்தான் அன்பு.

" அவ்வளவு தாண்டா அன்பு வாழ்க்கை"

நீ மட்டும் சந்தோசமா வாழனும்னு நெனச்ச அதனால மத்தவங்கள எவ்வளவோ காயப்படுத்துன.

மரணப்படுக்கையில் இருக்கும்போது நீ செய்த தவறுகளை நெனச்சு மன்னிப்புக் கேக்கணும்னு நினைச்ச. ஆனா அது கூட உன்னால முடியல.....

இவ்வாறாக அவன் செய்த பாவம், புண்ணியம் எல்லாவற்றையும் பற்றி அவனுக்கு அவனே சொல்லிக் கொண்டான்.

முதியவர் சவப்பெட்டியைத் திறந்தார்.

இருட்டில் இருந்து வெளிச்சத்திற்கு வந்தவனாக உணர்ந்தான்.


முதியவரைக் கட்டி அணைத்துக் கொண்டான், காலில் விழுந்து நன்றி கூறினான். பின்பு அந்தக் கூடாரத்திலிருந்து தன்னுடைய நண்பன் ராஜாவுடன் புதிய மனிதனாக வெளியே வந்தான்.

தன் குடும்பத்தாரைச் சந்திக்க வீட்டை நோக்கி வேகமாக நடந்தான்.....



**வே.விக்னேஷ்வரன்,**
**முதுகலை முதலாமாண்டு.**

# சித்திரம் பேசுதடி



அ.ஹாஜிரா பானு

இளங்கலை முதலாமாண்டு



த.மோகன தாரணி

இளங்கலை இரண்டாமாண்டு



மு.கிருத்திகா

இளங்கலை முதலாமாண்டு



செ.ராகவி

இளங்கலை முதலாமாண்டு




தமிழாய்வுத்துறையின்
சாதனைப் பயணம்...
அரையாண்டைக் கடந்து
யாதுமாகியின்
வெற்றிகரமான 7-வது இதழ்